மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (தனி வகைமுறை) சட்டமுன்வடிவு, 2010 (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2010 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி, 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மற்றும் தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156 (1)-காப்புரையின்படி, 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவை மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.